# இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

UAN.TN03D0061112

## பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
## International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:4 இதழ்:14 ஆகஸ்ட் 2018 Vol. 4 Issue : 14 August 2018





சி.சங்கீதா
பா.ஈஸ்வரன்
ச.கண்ணதாசன்
அரி.வே.விஸ்வேஸ்வரன்
இரா.வசந்தமணி
தி.மல்லிகா
கி.ரேவதி

பா.கலையரசி
அ.மரிய செபஸ்தியான்
சி.அம்சவேணி
சே.முனியசாமி
ஆ.ஈஸ்வரன்
க.பாலாஜி
ந.இராஜேந்திரன்

ம.பாபு
தி.நிரஞ்சனி
இரா.அருணா
சி.சாவித்ரி
அ.அனேஜா
வி.வசந்தா
ப.சண்முகராணி
த.சத்தியராஜ்

Inam ISSN : 2455 - 0531

UAN.TN03D0061112

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

ஆகஸ்ட் 2018 மலர் : 4 இதழ் : 14
August 2018 Volume IV Issue 14

## உள்ளே ...

### தமிழ்ச் செவ்வியல்

**தொல்காப்பியமும் திருக்குறள் களவியலும்**
முனைவர் சி.சங்கீதா | 4

**ஐங்குறுநூற்றில் மலர்கள் வருணனை**
முனைவர் பா.ஈஸ்வரன் | 9

**பத்துப்பாட்டுப் பதிப்புருவாக்கத்தில் உ.வே.சாமிநாதையர்**
முனைவர் ச.கண்ணதாசன் | 13

**வேதசாத்திரங்களின் கருத்துகள் திருக்குறளின் அடிப்படையில் திரிக்கப்பட்டவையே**
அரி.வே.விஸ்வேஸ்வரன் | 18

**பழங்காலத் தமிழர் வாழ்வியலும் அறிவியல் பொருட்புலங்களும்**
முனைவர் வசந்தமணி இராமலிங்கம் | 24

**புலிகொல் யானை**
முனைவர் தி.மல்லிகா | 34

**சங்கத் தமிழரின் நிமித்தம் சார்ந்த நம்பிக்கைகள்**
கி.ரேவதி | 37

### பக்தி இலக்கியம்

**திருமூலரின் இரந்தார்க்கீதல்**
முனைவர் பா.கலையரசி | 41


### தற்கால இலக்கியம்

**தீர்ந்த சுனை, காய்ந்த பனை, நேர்ந்த வினை - ஒத்திகை விஜய்யின் "மாள்வுறு நாடகம்" : பார்வையாளர் நோக்கு**
முனைவர் அ.மரிய செபஸ்தியான் | 45

**பெண்மொழியும் பண்பாட்டுக் கூறுகளும்**
முனைவர் சி.அம்சவேணி | 54

...

UGC APPROVED JOURNAL NO: 64244




## வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்


**முதுகுளத்தூர் அட்டாவதானம் சரவணப்பெருமாள் கவிராயரும் அவர்தம் கவிப்புலமையும்**

சே.முனியசாமி | 65

**கிழக்கிந்திய தாந்திரீகப் பாடல்கள்**

முனைவர் ஆ.ஈஸ்வரன் | 78

**பெருங்கற்காலக் கற்பதுக்கைகள் - தொல்லியல் கள ஆய்வு**

முனைவர் க.பாலாஜி | 91

**எட்டிசேரி : பெருங்கற்காலச் சமூகத்தின் வாழ்விடம்**

முனைவர் ந.இராஜேந்திரன் | 108

**காலத்துக்குக் காலம் மாறும் கலைப்பாணிகள்**

முனைவர் ம.பாபு | 115

**பகுப்பாய்வு மெய்யியலில் மொழி : சமகால மெய்யியலை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு**

திரவியராசா நிரஞ்சினி | 121

**இலக்கணம் கற்றல் முறையில் வரைபடங்களின் பங்கு**

இரா.அருணா | 132

**ஒப்பீட்டு நோக்கில் தமிழ் - தெலுங்கு இலக்கணங்களும் இன்றைய ஆய்வு போக்குகள்**

முனைவர் சி.சாவித்ரி | 138

**தண்டனைக் கொள்கைகளும் அவற்றின் நடைமுறைப் பொருத்தப்பாடும்**

அரியரெத்தினம் - அனோஜா | 148

**வளர்முக நாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஏற்படுத்தும் விளைவுகள்**

வினாயகமூர்த்தி - வசந்தா | 163


## கணினித்தமிழ்


**இணையப் பயன்பாட்டுக் கற்றல்வழித் தமிழ் வளர்ச்சி**

முனைவர் ப.சண்முகராணி | 174


## நூல் மதிப்பீடு


**'ஒடியன்'வழி இருளர்கள் : அறிமுகம்**

த.சத்தியராஜ் | 177


...

இனம்: பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் ISSN : 2455-0531 ஆகஸ்ட் 2018 மலர்:4 இதழ்:14 174

மதிப்பிடப்பெற்றது

# இணையப் பயன்பாட்டுக் கற்றல்வழித் தமிழ் வளர்ச்சி

*முனைவர் ப.சண்முகராணி*
*முதுமுனைவர் பட்ட ஆய்வாளர்*
*ஏ.பி.சி. மகாலெட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி*
*rani36726@gmail.com*

*Abstract: The paper aims to present the method of online learning for Tamil society improvement.*

**முன்னுரை**

நீண்ட நெடிய பாரம்பரியமும் தொன்மைச் சிறப்பும் மொழிவளமும் இலக்கியவளமும் கொண்டு உயர்தனிச் செம்மொழியாய் உலகை வலம்வந்து கொண்டிருப்பது தமிழ்மொழி. காலம்காலமாகப் பல்வேறு மாற்றங்களை அடைந்து இன்று தொழில்நுட்பத்தின் வழியாகத் தமிழை இனிமையாகவும் எளிமையாகவும் கற்றுக்கொடுப்பதற்குரிய சூழல் இணையத்தின் மூலம் உருவாகி உள்ளது. இணையக் கழகம் Internet Society என்னும் தன்னார்வ இயக்கம் ஒன்று 2020 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இணைய நுகர்வோரின் எண்ணிக்கை 400கோடியைத் தாண்டும் எனக் கணித்துள்ளது. இது உலகமக்கள் தொகையில் 6% ஆகும். உலகில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் இணையத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் ஓர் ஆசிரியர் பயன்விளைவு மிக்க தகவல்களைத் தெரிவு செய்வதிலும் மதிப்பீடு செய்வதிலும் மிகுந்த கவனத்தைச் செலுத்துவது அவசியமாகிறது.

**எதிர்காலத் தொழில்நுட்பங்கள்**

ஒரு மொழியை அனைவரும் சிறப்பாகப் பயன்படுத்த தொழில்நுட்பம் பலவகையிலும் பயன்பட்டு வருகிறது. தொழில்நுட்பங்களின் எண்ணிக்கையும் நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே செல்கிறது. அவற்றுள் இணையத்திற்கு ஒரு விசித்திரமான தன்மை உண்டு. தனியாள் இயக்கங்கள் உயர்கல்விக் கூடங்கள் அல்லது எவர் வேண்டுமென்றாலும் எந்நேரத்திலும் எத்தகவல்களையும் தங்குதடையின்றிச் சுதந்திரமாக வெளியிடலாம். கணினியின் விலைமதிப்பு அதிகமாக இருந்தாலும் www.geocities.Com www.tripod.com போன்ற வலைத்தளங்கள், இணைய நுகர்வோர் தத்தம் கருத்துக்களை இலவசமாக வெளியிட பற்பல வசதிகளை ஏற்பாடு செய்து தருவதால் கட்டுப்பாடற்ற நிலையில் நல்ல தகவல்களும் தீய தகவல்களும் குன்று போல் குவிந்துவிடுகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கனவாக

*மின்னூல்வழிக் கற்றல் (Learn through E - book)*

*குறும்படம்வழிக் கற்றல் (Learn through Digital Video)*

*திறன்பேசிவழிக் கற்றல் (Learn through SmartPhone)*

ஆகியன சிறப்பாகப் பயன்பட்டு வருகின்றன.

**மின்னூல்வழிக் கற்றல்** *(Learn through E—book)*

முற்காலத்தில் கல்வெட்டுக்களிலும் ஓலைச்சுவடிகளிலும் காகிதங்களிலும் நூல்களிலும் தமிழ்மொழியைக் கற்று வந்த காலம் மாறி, இன்று அறிவியலின் அதீத வளர்ச்சியில் மின்னூல் உருவாக்கப்பட்டிருக்கிறது. கணிணி, மடிக்கணிணி, தொட்டுணர்கருவி (I pad) போன்றவற்றில்

தமிழ்நூல்களைப் பதிவேற்றம் செய்து இருந்த இடத்தில் இருந்து கொண்டு வாசிப்பதற்கு ஏற்புடையதாக அமைவதே மின்னூல் தொழில்நுட்பம் ஆகும்.

இன்றைய சூழலில் கணினித் தொழில்நுட்பம் அன்றாட வாழ்வில் இன்றியமையாத ஒன்று. அதன்வழிப் பதிவேற்றம் காணும் மின்னூல்கள் நூலகம் சென்று புத்தகம் தேடும் நேரத்தைக் குறைத்துக் கற்கும் வாய்ப்புகளை அதிகரிக்கின்றன. தமிழில் உள்ள பல்வேறு வகையான நூல்களை நினைத்த நேரத்தில் கற்பதற்கும் கற்கும்போது ஏற்படும் ஐயப்பாடுகளை உடனுக்குடன் தீர்ப்பதற்கும் நூலில் உள்ள கருத்துக்களைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கும் உரிய வழிமுறைகள் மின்னூலில் அதிகமாக உள்ளன. அனைவரின் விருப்பத்துக்கு ஏற்ப நூல்களைத் தேர்வு செய்து கற்பதற்குரிய வாய்ப்பு இருப்பதால் அவர்களுக்குத் தமிழ்மொழியைக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் அதிகரிக்கிறது. மேலும் தனக்குள் மறைந்து இருக்கும் எழுத்துப் படைப்புகளை உலகோருக்கு எடுத்து இயம்பும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. பொருளாதார ரீதியாக தரமான தமிழ்ப்படைப்புகள் படிக்கும் வாசகர்களை உடனுக்குடன் சென்றடைவதுடன் அதனைச் சார்ந்த நல்ல கருத்துக்களும் இணைய கருத்துப் பரிமாற்றங்களும் தரமான தமிழ் மின்னூல்கள் படைக்க அபரிதமான வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளன.

மின்னூல்வழிக் கற்பதால் பல புத்தாக்கச் சிந்தனைகளும் மாற்றங்களும் உருவாகும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. பசுமைநிறைந்த உலகை உருவாக்குவதற்கு, காகிதங்களின் தேவை பெரிதும் குறைவதால் மரங்களின் ஆயுள்காலம் அதிகரிக்கப்பட்டு வருங்காலச் சமுதாயம் செழுமையுடன் வாழ வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தெளிவான எழுத்துக்கள் உடனுக்குடன் மின்னுலகில் உலாவருவதன் மூலம் அதிகமான செய்திகளைக் கற்று அறியும் வாய்ப்பு, நிறைய நூல்களைத் திரட்டிப் படிக்கும் எளிய முறை போன்றவை மின்னூல்வசம் நம்மை இழுக்கும் சக்திகளாக மாறி உள்ளன. காணொளி இசை, வண்ணமயமான விளக்கப்படங்கள், இணையப் பக்கம் வழி இருவழித் தகவல் பரிமாற்றங்கள் மூலம் தமிழில் எழுதவும் படிக்கவும் எண்ணற்ற வாய்ப்புகளை மின்புத்தகங்கள் வழங்குகின்றன.

### குறும்படம்வழிக் கற்றல் (*Learn Through Digital*)

தமிழ் கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிற்குப் பெரிதும் பயனுள்ளதாக அமையும் தொழில்நுட்பங்களில் மின்வழித் தயாரிக்கும் குறும்படமும் ஒன்று. காலம்காலமாகக் கற்ற பாடங்களை, சோதனை முறைகளையே பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். அதிவேகமாக வளர்ந்துவரும் அறிவியல் தொழில்நுட்பம் கற்றல் சோதனைகளை மாற்றி அமைத்துவிடுகிறது. பாடத்தலைப்புகளை ஒரு நிமிடம் முதல் இரண்டு நிமிடத்திற்குள் இணையத்தின்வழித் தொடர்புடைய அனைத்துச் செய்திகளையும் சேகரித்து விறுவிறுப்பான குறும்படம் தயாரித்து ஒப்படைக்கும் சூழலில் அதிகநேரம் செலவு செய்யாமல் சுருங்கக்கூறி விளங்கவைக்கும் திறனை வளர்த்துக்கொண்டு தன்னம்பிக்கையுடன் அப்படைப்பை உருவாக்கவும் செய்கிறார்கள். பலநாட்கள் பல இடங்களுக்குச் சென்று பலநூல்களைக் கற்றுப்படைத்த நிலைமாறி குறும்படத்தின்வழி குறுகிய நேரத்தில் பலவிதமான செய்திகளை ஒன்றுதிரட்டி உருவாக்கும் படைப்பு தமிழ் மொழியைக் கற்போருக்குச் சுமையாக இல்லாமல் சுகமாகவே அமைகிறது.

### திறன்பேசிவழிக் கற்றல் (*Learn through Smart Phone*)

இன்றைய சூழலில் நம்மிடையே திறன்பேசி என்பது உயிரும் உடலும் போல இரண்டறக் கலந்த ஒன்றாக அமைந்திருக்கிறது. அதன்வழியாகத் தமிழ்மொழியை மிகுந்த ஆர்வத்துடன் பயன்படுத்த முயல்வதைக் காணமுடிகிறது. பெரும்பாலானோரிடமும் திறன்பேசி பயன்பாட்டில் இருப்பதாலும் அடிப்படையில் தமிழ் எழுத்துக்கள் இணைக்கப்பட்டுள்ளதாலும் கற்றல் கற்பித்தல்

எளிமையாக நடைபெற வழிவகுக்கிறது. உலகநாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தடையில்லா இணையச்சேவை கைத்தொலைபேசிக் கல்விமுறை தமிழ்மொழி வளர்ச்சிக்குப் புதுப்பாதை அமைத்துத் தந்துள்ளது. எளிமையான கட்டமைப்பு மூலம் தமிழ்ப் பயனீட்டாளர்களை ஒருமுகப்படுத்துவதற்கு குறுந்தகவல் அனுப்புவதன் மூலம் தமிழில் கலந்துரையாட முடிகிறது. பாடத்திட்டங்கள் வாசிக்கும் வழிமுறைகள் கணிணி, இணையம், திறன்பேசி இம்மூன்றையும் ஒருங்கிணைப்பதன் மூலம் தமிழ்மொழியை எளிமையாகவும் இனிமையாகவும் பயன்படுத்த முற்படுகின்றனர்.

**முடிவுரை**

தொன்மைமிக்க தமிழ் தனக்கே உரிய அழகை, செழுமையை நம்மிடம் அடையாளம் காட்ட இணையம் சிறந்தவொரு வழித்தடமாக அமைந்துள்ளது. இனிவரும் காலம் இளைய சமுதாயம் தமிழைச் சுவாசிக்க, நேசிக்க, புதுவகையான சிந்தனைகளை உள்ளடக்கிப் புத்தாக்க எழுச்சியோடு செம்மொழியை உலகோர் அனைவரும் கசடறக் கற்க, 21ஆம் நூற்றாண்டையும் கடந்து அதன்படி நிற்க, புதிய ஊடகமும் இணையமும் புத்தாக்கச் சிந்தனையும் பேருதவி புரியும் என நம்பலாம்.

**சான்றாதாரங்கள்**


- *SOCRATIVE, QUIZZES, QUIZLET, PLICKERS GOOGLE PLAY STORE (Androids)*
- www.socrative.com
- www.plickers.com


INAM : INTERNATIONAL E-JOURNAL OF TAMIL STUDIES
இனம் இனத்தைச் சேரும்